# பெருநகர சென்னை மாநகராட்சி
# செய்தி வெளியீடு

**செ.வெ.எண். 139** **நாள் : 19.10.2016**

## வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு தமிழக அரசின் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் திரு.க.பணீந்திரரெட்டி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்களின் முன்னிலையில் ஆய்வுக்கூட்டம்

-----

பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் மாளிகையில் இன்று (19.10.2016) தமிழக அரசின் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் திரு.க.பணீந்திரரெட்டி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 15 மண்டலங்களுக்கும் கண்காணிப்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்ட இந்திய ஆட்சி பணியின் அலுவலர்கள் மற்றும் பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை, சென்னை குடிநீர் வடிகால் துறை, மின்சார வாரியம், போக்குவரத்து காவல்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் ஆகிய பல்வேறு துறைகளின் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வரவிருக்கும் வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய முக்கிய பணிகள் குறித்தும், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் இக்கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டு, அனைத்து பணிகளும் இரண்டு நாட்களில் முடிக்கப்பட வேண்டுமென முதன்மைச் செயலாளர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. ஒவ்வொரு மண்டலத்திலும் கண்காணிப்பு அலுவலர்கள் தலைமையில் மண்டல அலுவலர்கள், செயற்பொறியாளர்கள், உதவி செயற்பொறியாளர்கள், சுகாதார அலுவலர்கள் உட்பட அனைத்து துறை அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம் நடத்தி மற்றும் கள ஆய்வு மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. கண்காணிப்பு அலுவலர் தலைமையில் வருகிற 21.10.2016 அன்று மாலை 3.00 மணிக்கு அந்தந்த பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலுவலகங்களில் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், குடியிருப்பு நலச்சங்கங்கள் ஆகியோரின் ஆலோசனைகளை பெற்று உடன் நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. எனவே, விருப்பமுள்ள தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், குடியிருப்பு

நலச்சங்கங்களை சார்ந்தவர்கள் மேற்குறிப்பிட்ட நாளில் அந்தந்த மண்டல அலுவலகங்களில் வருகை தந்து தங்களது பகுதிக்குட்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த கருத்துகளை தெரிவிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் வரவிருக்கும் வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்வதற்காக ரூ.18 கோடி செலவில் 1229 கிலோ மீட்டர் நீளத்திற்கு மழைநீர் வடிகால்வாய்கள் தூர்வாரப்பட்டுள்ளது. 33 புதிய மழைநீர் வடிகால்வாய்கள் மற்றும் 52 இணைப்பு மழைநீர் வடிகால்வாய்கள் ரூ.91 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 42 மீட்புக் குழுக்களும் (Rescue Teams), 103 மோட்டார் பொருத்தப்பட்ட படகுகளும், பொதுமக்களை தங்க வைப்பதற்காக 156 நிவாரண முகாம்களும், உணவு தயாரிப்பதற்காக 4 நிவாரண மையங்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. மேலும், மரக்கிளைகள் அப்புறப்படுத்துவதற்காக 45 மர அறுவை இயந்திரங்களும், வாகனங்களும், மழைக்காலங்களில் தொற்றுநோய்கள் ஏற்படாமல் இருப்பதற்காகவும், கொசுக்களை கட்டுப்படுத்திட 41 வாகனங்களுடன் 568 ஸ்பேரயர்களும், 434 கைத்தெளிப்பான்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

பெருநகர சென்னை மாநகராட்சி மருத்துவத்துறையின் சார்பில் மண்டல அலுவலகங்களில் தலா மூன்று மருத்துவ குழுக்கள் பணியாற்றிடவும், தேவையான அளவு மருத்துவ முகாம்கள் நடத்திடவும் மற்றும் அவசர கால மருந்துகள் தயார்நிலையிலும் வைக்கப்பட்டுள்ளது. பொதுப்பணித்துறையின் மூலம் அடையாறு, கூவம் மற்றும் எண்ணூர் ஆகிய முகத்துவாரங்களில் தூர்வாரி தயார்படுத்தப்பட்டுள்ளது. நெடுஞ்சாலைத்துறை மற்றும் மாநகராட்சி மூலம் பராமரிக்கப்படும் சுரங்கப்பாதைகளில் மழைநீர் தேங்காமல் தடுத்திட அதிக குதிரைத் திறன் கொண்ட பம்பு செட்டுகள் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளது. போக்குவரத்து காவல்துறையின் மூலம் மழைக்காலங்களில் சாலைகளில் போக்குவரத்து நெரிசல் ஏற்படும் இடங்களைக் கண்டறிந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு சீரான போக்குவரத்திற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. சென்னை குடிநீர் வடிகால் வாரியம் மூலம் குளோரின் கலந்த குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறையின் மூலம் நிவாரணம் மற்றும் மீட்புப் பணிகள் மேற்கொள்ளவும், தேவையான அளவு இன்பிளேடபில் படகு தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளது. மேலும், மழைநீர் தேங்கும் தாழ்வான பகுதிகளில் மழைக்கு முன்பாகவே சம்பந்தப்பட்ட இடங்களில் படகுகளை தயார்நிலையில் வைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மின்சார வாரியத்தின் மூலம் மழைக்காலங்களில் மின்தடை

ஏற்படுவதை தடுத்திட மின் பகிர்மான பெட்டிகளை பரிசோதித்து தயார்நிலையில் வைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நிவாரண முகாம்களில் தன்னார்வாளர்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களை ஈடுபடுத்தி பாதிக்கப்பட்ட மக்களுக்கு சேவை செய்ய அறிவுறுத்தப்பட்டது. பள்ளி ஆசிரியர்கள் / ஆசிரியைகள் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட பணியாளர்கள் மூலம் நிவாரண முகாம்களில் சேவை மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள அறிவுரை வழங்கப்பட்டது.

பொதுப்பணித்துறை, அடையாற்றில் விமான நிலைய 2வது ஓடுதளத்தின் மேற்புறத்தில் வலைதடுப்பு (Trash Trap) ஏற்படுத்தி மிதக்கும் பொருட்களை ஆங்காங்கே தடுத்து அகற்றிட அறிவுறுத்தப்பட்டது. இராணுவ அதிகாரிகள் பயிற்சி மையம் அருகில் எஞ்சியுள்ள கருங்கல் தூண்களை உடன் அகற்ற அறிவுறுத்தப்பட்டது.

நெடுஞ்சாலைத்துறை, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள நெடுஞ்சாலைத்துறை சாலை பக்கவாட்டில் அமைக்கப்பட்டுள்ள மழைநீர் வடிகால்வாய்கள், சாலை மழைநீரை மட்டுமல்லாமல் அப்பகுதிகளில் பெய்யும் முழு மழைநீரையும் கொண்டுசெல்லும் அளவிற்கு வடிவமைக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

2016 வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை அலுவலர்களை ஒருங்கிணைத்து மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை முதன்மைச் செயலாளர் திரு.க.பணீந்திர ரெட்டி, இ.ஆ.ப., அவர்களை அரசு நியமனம் செய்துள்ளது.

கீழ்க்கண்ட அலுவலர்கள் கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை அலுவலர்களாக தமிழக அரசால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

| வ.எண் | அலுவலர் பெயர் | பொறுப்பு மண்டலம் |
|---|---|---|
| 1. | திருமதி.ஆர்.லில்லி, இ.ஆ.ப.,<br>அரசு இணைச் செயலாளர் (உயர்கல்வித் துறை) | திருவொற்றியூர் மண்டலம் |
| 2. | திருமதி.மரியம் பல்லவி பல்தேவ், இ.ஆ.ப.,<br>இணை ஆணையாளர் (அமலாக்கத்துறை மற்றும் வணிகவரித்துறை) | மணலி மண்டலம் |

| | | |
|---|---|---|
| 3. | டாக்டர்.பிங்க்லே விஜய் மாருதி, இ.ஆ.ப.,<br>அரசு இணைச் செயலாளர் (தொழில் துறை) | மாதவரம் மண்டலம் |
| 4. | டாக்டர்.தாரேஸ் அகமது, இ.ஆ.ப.,<br>திட்ட இயக்குநர் (மாநில ஊரக சுகாதாரத் திட்டம்) | தண்டையார்பேட்டை மண்டலம் |
| 5. | டாக்டர்.பி.உமாநாத், இ.ஆ.ப.,<br>மறுவாழ்வுத்துறை இயக்குநர் | இராயபுரம் மண்டலம் |
| 6. | திரு.சி.காமராஜ், இ.ஆ.ப.,<br>மேலாண்மை இயக்குநர் (TANCEM) | திரு.வி.க.நகர் மண்டலம் |
| 7. | திரு.எம்.பாலாஜி, இ.ஆ.ப.,<br>இணை ஆணையாளர் (வணிகவரித்துறை) | அம்பத்தூர் மண்டலம் |
| 8. | டாக்டர்.ஆர்.ஆனந்தகுமார், இ.ஆ.ப.,<br>நிர்வாக இயக்குநர் (தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை) | அண்ணாநகர் மண்டலம் |
| 9. | திருமதி. ககர்லா உஷா, இ.ஆ.ப.,<br>மேலாண்மை இயக்குநர் (TNUFSIL) | தேனாம்பேட்டை மண்டலம் |
| 10. | திரு.சி.விஜயராஜ் குமார், இ.ஆ.ப.,<br>உறுப்பினர் செயலாளர் (CMDA) | கோடம்பாக்கம் மண்டலம் |
| 11. | திரு.ஆர்.கிர்லோஷ் குமார், இ.ஆ.ப.,<br>உறுப்பினர் செயலாளர் (Tasmac) | வளசரவாக்கம் மண்டலம் |
| 12. | திருமதி.பூஜா குல்கர்னி, இ.ஆ.ப.,<br>திட்ட இயக்குநர் (சர்வ சிக்ஷா அபியான்) | ஆலந்தூர் மண்டலம் |
| 13. | டாக்டர்.எஸ்.ஸ்வர்ணா, இ.ஆ.ப.,<br>அரசு செயலாளர் (P & AR) | அடையாறு மண்டலம் |
| 14. | டாக்டர்.ஆர்.பழனிச்சாமி, இ.ஆ.ப.,<br>ஆணையாளர் (புவியியல் மற்றும் சுரங்கத்துறை) | பெருங்குடி மண்டலம் |
| 15. | திருமதி.கே.மைதிலி ராஜேந்திரன், இ.ஆ.ப.,<br>மேலாண்மை இயக்குநர் (தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்விக்கழகம்) | சோழிங்கநல்லூர் மண்டலம் |

பொதுமக்கள் தங்கள் புகார்களை பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் அமைக்கப்பட்டுள்ள 24 மணிநேரமும் இயங்கும் கட்டுப்பாட்டு அறையில் உள்ள 044–25619206, 25619511, 25385005, 25384965, 25383694, 25367823, 25387570 என்ற தொலைபேசி எண்களுக்கும், வாட்ச் அப் (Whatsapp) மூலம் 9445477207, 9445477203, 9445477206, 9445477201, 9445477205 என்ற எண்ணிற்கும் தெரிவிக்கலாம். மேலும், gccdm1@chennaicorporation.gov.in, gccdm2@chennaicorporation.gov.in, gccdm3@chennaicorporation.gov.in, gccdm4@chennaicorporation.gov.in, gccdm5@chennaicorporation.gov.in என்ற இணையதள வாயிலாகவும் பதிவு செய்யவும் சிறப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சி அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் முழுவீச்சில் மேற்கொண்டு வருகிறது.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெருநகர சென்னை மாநகராட்சி**